| | | | |
|---|---|---|---|
| Headline | MIC members protest to get good leadership | | |
| MediaTitle | Tamil Nesan (Sunday) | | |
| Date | 28 Dec 2014 | Language | Tamil |
| Circulation | 55,000 | Readership | 210,000 |
| Section | News | Color | Black/white |
| Page No | 3 | ArticleSize | 450 cm² |
| AdValue | RM 1,309 | PR Value | RM 3,927 |
| | | | |



# ஆற்றல் மிக்க தலைமைத்துவத்திற்காகவே மஇகா தலைமையகத்திற்கு முன் உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம்

**சமூக ஆய்வாளர்கள் கருத்து**







**கோலாலம்பூர், டிச. 28 -** அண்மையில் தலைநகரில் ம.இ.கா. தலைமையகத்திற்கு முன் உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியது, கட்சியை பலவீனப்படுத்த அல்ல என்றும் மாறாக தங்களை வழிநடத்த ஆற்றல்மிக்க தலைமைத்துவம் வேண்டுமென்ற ஆதங்கத்தில் தான் என அரசியல் ஆய்வாளர்கள் கருத்துரைத்துள்ளனர்.

கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதிலிருந்து எந்தவொரு மாற்றத்தையும் கொண்டு வரத் தவறியதோடு தமது கையாலாகாத போக்கினை எதிர்த்து டத்தோஸ்ரீ ஜி.பழனிவேல் பதவி விலகிச் செல்ல வேண்டுமென்ற நோக்கில்தான் அதிருப்தியாளர்கள் கூடினர் என்றும் கூறப்படுகிறது.

கட்சியை வழி நடத்த தலைமைத்துவ பண்புகள் அறவே அற்ற பழனிவேலின் மெத்தனப் போக்கைக் கண்டு கட்சி உறுப்பினர்களும் பொதுமக்களும் அவரை மௌனி என்றும் தன்னை முன்னிலைப் படுத்தத் தவறியவர் என்றும் பிரச்னைகளைக் கண்டு ஓடுபவர் என்றும் விமர்சிக்கின்றனர்.

மலேசிய அறிவியல் பல்கலைக் கழக பேராசிரியர் டாக்டர் சிவமுருகன் கூறும் போது, கட்சியை தேசிய முன்னணியின் உறுப்புக் கட்சிகளைப் போன்று வலுவாகவும் ஆற்றல் மிக்க கட்சியாக நிலைநிறுத்த முடியாமலும் தற்கால சூழ்நிலைக்குத் ஏற்றவாறு உயர்த்தத் தவறிய பழனிவேலுக்கு இது ஒரு மாபெரும் எச்சரிக்கை என விமர்சித்துள்ளார்.

பழனிவேல் தம்மை உணர்ந்து அவரின் திறனையும் ஆற்றலையும் பயன்படுத்தி கட்சிப் பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டு, கட்சியின் அனைத்துப் பிரிவினரையும் ஒன்றிணைத்து, அரவணைத்து கட்சி நிலைக்க இந்தியர்கள் இந்நாட்டில் தலைநிமிர்ந்து வாழ வழி காண வேண்டுமென சிவமுருகன் வலியுறுத்தினார்.

பழனிவேல், தமது ஆற்றாமையையும் கட்சியின் பிரச்னைகளை அலசி ஆராய்ந்தும், அதற்கான தீர்வைக் கண்டறிந்து களைவதோடு தேசிய முன்னணியின் வெற்றிக்கு உறுதுணையாக நிற்க வேண்டுமென்றும் சிவமுருகன் அறிவுறுத்தியுள்ளார்.

மலேசியாவின் அரசியல் கலாசாரம் கட்சியை வழி நடத்த ஒரு வலுவான, துடுப்புமிக்க, ஆற்றல்மிக்க, பிரச்னைகளைக் களையும் திறன்மிக்க தலைவரையே ஏற்றுக் கொள்வதாகவும், பழனிவேலுவும் தம்மை சுய பரிசோதனை செய்து கொண்டு எழுந்து நிற்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

கட்சியின் முன்னைய தலைவர்களுடன் ஒப்பிடும் போது, பழனி ஒரு பலமில்லாத, அதிகம் பேசாத, கடுமையான பிரச்னைகளை காத்திருந்து செயல்படும் போக்கு கொண்டவரென வட மலேசியா சட்டப் பேராசிரியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

டாக்டர் அஹ்மாட் மார்தாடா கூறும் போது, சுயாட்சியான நடுநிலையான குழுவொன்று தோற்றுவிக்கப்பட்டு கட்சியின் செயல்பாடுகள் நிர்வகிக்கப்பட வேண்டுமென்றும், உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் போக்கோடு, கட்சி நலனை முன் நிறுத்தி முதுகில் குத்தும் போக்கை விட்டொழிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இது பற்றி பேராசிரியர் சார்ஜிட் சிங் கருத்துரைக்கும் போது, கட்சியிலும், இந்தியர்கள் சார்ந்த பிரச்னைகளிலும் பழனிவேல் மௌனமாக இருப்பது நலிந்த மக்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்றும், நான்காண்டுகளில் கட்சியில் அளவுக்கதிகமான அதிருப்தியே வெளிப்பட்டுள்ளதாகவும் அதனைக் களைவதற்கு ஒரு துடிப்புமிக்க தலைமைத்துவமும் சவால்களை அச்சமில்லாமல் எதிர்நோக்கும் நெஞ்சுரம் பெற்ற தலைவரும், கட்சியை உயிர்ப்பிக்க நோக்கம் கொண்ட தலைவர் ஒருவர் முக்கியமாகத் தேவைப்படுவதாகக் குறிப்பிட்டார்.

கட்சிக்குப் புத்துயிர் ஊட்டி அதனை துடிப்பாக வழிநடத்த பழனிவேல் முனைய வேண்டுமென்றும் உறுப்பினர்களும் வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமை உணர்வோடு பாடுபட வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

Powered by: iSENTIA